**பன்னிரண்டாம் வகுப்பு மாதிரி வினாத்தாள் (2021 - 2022)**

**XII STD SAMPLE QUESTION PAPER (2021 -2022)**

**தமிழ் (106) பருவம்:2 ( TAMIL, TERM-2 )**

**காலஅளவு :2 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 40**

**Time allowed : 2 Hrs** **Maximum marks:40**

I. **பின்வரும் இலக்கண வினாக்களில் எவையேனும் மூன்றனுக்குக் குறுகிய விடை எழுதுக.** 3x2=6

1. கருத்தைக் காட்சிப்படுத்தும் படிமம் குறித்து விளக்கம் தருக.
2. இடைவெளி விட்டும்விடாமலும் எழுதுவதால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.
3. காற்புள்ளியால் ஏற்படும் பொருள்மயக்கம் குறித்து எழுதுக.
4. சொற்களை மாற்றி எழுதும் போது ஏற்படும் பொருள்மயக்கம் குறித்து எழுதுக.
5. மெய்ப்படிமம் என்றால் என்ன?

II. **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் குறுகிய விடை எழுதுக.** 2x2=4

6. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? -குறள்வழி விளக்குக.
7. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
8. இராமன் சுக்ரீவனிடம் மொழிந்தன யாவை?
9. பங்குனி உத்திரத்திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.?

III. **பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குக் சுருக்கமான விடை எழுதுக.** 2x3=6

10. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
11. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.
12. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

13. 'நெல்லின் நேரே வெண்கல்உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக

IV. **பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு விரிவான விடை எழுதுக.** 2x5=10

14. தாய்வழிக் குடும்பம் குறித்து விளங்க வரைக.
15. குடும்பம்- இச்சொல்லுக்கு இலக்கியம் சார்ந்து விளக்கம் தருக.
16. சென்னையின் தொன்மை குறித்து விவரி.
17. சென்னை நகரம் உருவாகிய வரலாற்றை எழுதுக.

V. **பின்வரும் துணைப்பாடப் பொருண்மைகளுள் ஒன்று குறித்து விரிவாக எழுதுக.** 1x5=5

18. உரிமைத்தாகம் -கதைச்சுருக்கம்
19. முகவரி இழந்த தலைக்குளம்

VI. **பின்வரும் உரைநடைப் பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக.** (4)

20. தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளிகள், ஓட்டுநர்கள் போன்றவர்களை மட்டும்தான் தானியங்கி இயந்திரங்கள் பாதிக்கின்றன என்றில்லை. கணக்காளர்கள், இதழாளர்கள், சில்லறை உணவு வணிகர்கள், அலுவலக எழுத்தர்கள், ஆசிரியர்கள் முதலான பலருக்கும் இயந்திரங்களால் வேலை இழக்கும் அச்சுறுத்தல் இருக்கிறது.. 2016-இல் வெளியான ஒரு ஆய்வறிக்கையின்படி ஒரு மணி நேரத்துக்கு ரூபாய்.1,433 சம்பளமாகப் பெறக்கூடிய வேலைகளில் 83 சதவீதம் தானியங்கிகள் செய்துவிடக் கூடியவையே. இதற்கும் மேல்நிலையில் உள்ளவர்களும் இந்த அச்சுறுத்தலிலிருந்து தப்பிவிட முடியாது - மருத்துவர்கள், கணக்காளர்கள், ஏன் வழக்கறிஞர்கள்கூட இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார்கள்.

2000-ஆம்ஆண்டிலிருந்து அமெரிக்காவில் உற்பத்தித் தொழிலில் 50 லட்சம் பேர் தானியங்கி இயந்திரங்கள் காரணமாக வேலையை இழந்திருக்கிறார்கள். 2000-ஆம்ஆண்டில் உற்பத்தித் தொழில் வாய்ப்புகள் சரிவடையத் தொடங்கியபோது, உடல் ஊனத்துக்கான சலுகையைக் கேட்கும் விண்ணப்பங்கள்

அதிகரிக்க ஆரம்பித்தன.வேலைஇழப்புகாரணமாகத் தற்கொலைகள், போதை மருந்து பயன்படுத்துதல் போன்ற தீங்குகள் பெருகின.. அமெரிக்கர்களின் சராசரி ஆயுள் குறைந்துவிட்டது. இது 1918-இல் ஏற்பட்ட ஸ்பானிஷ் காய்ச்சலுக்குப் பிறகு நிகழ்ந்திராத ஒன்றாகும்.

VII. <u>ஒன்றுபற்றிக்கடிதம்எழுதுக</u>. 1x5=5

**21. நீ பார்த்து மகிழ்ந்த ஒரு குறும்படம் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

**[ அல்லது ]**

**22. உங்கள் பகுதியில் நலவாழ்வு நிலையம் அமைத்துத் தருமாறு மருத்துவத்துறை இயக்குநருக்குக் கடிதம் வரைக.**
**( இருகடிதங்களிலும் உன் முகவரி அ.நன்மாறன் / அ.நன்மங்கை, 23. நல்வாழ்வுத் தெரு, ஆலந்தூர் , சென்னை-18 எனக் கொள்க)**

---